2025 செப்டம்பர் மாதம் 02 – ஆம் தேதி செவ்வாய்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர் : 124 /2024

2025–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28– ஆம் தேதி செவ்வாய்கிழமை திருமதி.T.சுபத்ரா, கிரேடு I பென்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW6 – ராஜாங்கம் |
| தகப்பனார் பெயர்: | கருத்தக்கண்ணன் |
| ஊர்: | சுப்புராஜ்நகர் |
| வட்டம்: | போடிநாயக்கனூர் |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | ஆட்டோ ஓட்டுநர் |
| வயது : | 48 |

02.09.2025

( 1 முதல் 3 எதிரிகள் ஆஜர்).

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட போலீசாரால் அடையாளம் காணப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:–**

நான் தற்போது ஆட்டோ ஓட்டுநராக தொழில் செய்து வருகிறேன். சுமார் 2 வருடங்களுக்கு முன்னர் நான் ஆட்டோ ஓட்டி வந்தபோது, போடி–தேவாரம் மெயின்ரோட்டில் உள்ள பெட்ரோல் பங்கில் டீசல் போட்டுக்கொண்டிருந்தேன். அப்போது போலீசார் வந்து என்னை மறித்து என்னிடம் கையொப்பம் கேட்டார்கள், நான் வெள்ளைத்தாளில் கையொப்பம் மட்டும் போட்டுக்கொடுத்தேன். போலீசார் கையொப்பம் போடும்படி கேட்டதால் நான் கையொப்பம் போட்டுக்கொடுத்தேன். நான் கையொப்பம் செய்யும்போது என்னுடன் வேறுயார் கையொப்பம் போட்டார்கள் என்று எனக்கு நியாபகம்

இல்லை. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடைய கையொப்பம் அல்ல. என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள கையொப்பம் என்னுடையதல்ல. வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக கருதப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 16.10.2023ம் தேதி மாலை சுமார் 04.00 மணியளவில் நானும், ஜெயம் நகரை சேர்ந்த மணி என்பவரும் போடி–தேவாரம் ரோட்டில் உள்ள தேவராஜ் பெட்ரோல் பங்க் அருகில் அண்ணாமலை பர்னிச்சர் கடை முன்பு கூட்டமாக இருந்தது. அதை பார்ப்பதற்காக நானும், மணியும் அந்த இடத்திற்கு போனோம் என்றும், அங்கு போடி காவல்நிலைய ஆய்வாளர் அவர்கள் எங்களை அழைத்து போடி காவல்நிலைய குற்ற எண்.493/23 என்ற வழக்கில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, வரைபடம் தயார் செய்த நிலையில், அதே இடத்தில் பார்வை மகஜர் எங்கள் முன்னிலையில் தயார் செய்தனர் என்றும், அதில் நானும், மணி என்பவரும் மணி கையொப்பம் செய்தோம் என்றும், பின்னர் அதே கடையில் சிறிது இரத்தம்பட்ட ஐவரி கலர் டைல்ஸ் சிறிதளவும், இரத்தம்படா ஐவரி கலர் டைல்ஸ் ஒன்றும் எங்கள் முன்பு கைப்பற்றினார்கள் என்றும், அதற்கு அந்த இடத்திலேயே அத்தாட்சி தயார் செய்தனர் என்றும், அந்த அத்தாட்சியில் நானும், மணியும் கையொப்பம் செய்தோம் என்றும், ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும், அவர்கள் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள் என்றும், ஆஜர் எதிரிகள் எனக்கு வேண்டியவர்கள் என்பதால் கையொப்பம் போடவில்லை என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை** – இல்லை

**மறு விசாரணை** :– இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 02.09.2025 அன்று செவ்வாய்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SANKAR Digitally signed by SANKAR Date: 2025.09.02 18:16:02 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி (FAC), தேனி.
02.09.2025